*KALAM International Research Journal*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*
*15(2), 2022*

# முஸ்லிம் அறிஞர்கள் இஸ்லாமிய சட்டவியல் துறைக்கு ஆற்றிய பங்களிப்புகள்: இமாம் அவ்ஸாஈயின் பங்களிப்பினை மையப்படுத்திய ஆய்வு

**எம்.ஐ. நஸ்ரின்[1], ஜீ.ஜீ.ஜே. வலீத் அஹமட்[2] & எம்.இஸட்.எம். நபீல்[3]**
அரபு இஸ்லாமிய கற்கைகள் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

Correspondence: nafeel.zawahir@arts.pdn.ac.lk

**கட்டுரைச் சுருக்கம்**

இஸ்லாமிய சட்டத்துறை வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த அறிஞர்களுள் இமாம் அவ்ஸாஈ அவர்களும் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றார். தனது ஆரம்ப காலம் முதலே இஸ்லாமிய அறிவுத்தேடலில் ஈடுபட்ட அவர்கள் பல பகுதிகளையும் சேர்ந்த ஆசிரியர்களிடமிருந்து அறிவைப் பெற்றதோடு அதன் விளைவாக தன்னை வளர்த்துக் கொண்டது மாத்திரமன்றி அதனைக் கொண்டு பல மாணவர்களுக்கும் கற்றுக்கொடுத்தார். இவ்வாய்வானது இமாம் அவ்ஸாஈ அவர்கள் இஸ்லாமிய சட்டத்துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்கள் தொடர்பாக விரிவாக ஆராய்தலை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பண்புரீதியாக அமைந்துள்ள இவ்வாய்வானது இரண்டாம் நிலைத்தரவுகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வினை மேற்கொள் வதற்காக இமாம் அவ்ஸாஈ அவர்கள் இஸ்லாமிய சட்டத்துறைக்கு செய்த சேவைகள் தொடர்பாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் நூட்கள் போன்றவை மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வில் இமாம் அவ்ஸாஈ அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை வரலாறு, அவருடைய அறிவுத்தேடல், இஸ்லாமிய சட்டத்துறை இஸ்லாமிய சர்வதேச சட்டத்துறை என்பனவற்றுக் க்காற்றிய பங்களிப்புக்கள் போன்ற பிரதானமான விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. ஏனைய பிரதான நான்கு இமாம்களை விட இவருடைய பங்களிப்புக்கள் குறைவாகக் காணப்பட்டாலும் கூட இஸ்லாமிய சட்டத்துறைக்கு இவர் ஆற்றிய பங்களிப்பானது இன்றும் சிறப்புப் பெற்று விளங்குகின்றது என்பதனை ஆய்வு முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

**பிரதான சொற்கள்:** *முஸ்லிம் அறிஞர்கள், இஸ்லாமிய சட்டவியல் துறை, பங்களிப்புக்கள், இமாம் அவ்ஸாஈ*

## 1. அறிமுகம்

*இமாம் அவ்ஸாஈ அவர்களின் முழுப்பெயர் அப்துர்ரஹ்மான் இப்னு அம்ர் இப்னு முஹம்மத் அல் அவ்ஸாஈ ஆகும் (றஸ்ஸாக், 2008; ஹுஸைன், 2010; இப்றாஹீம், 2004; ஷைக், 2006; அஹ்மத்). அவரது புனைப் பெயர் அபூ அம்ர் ஆகும் (ஷைக், 2006; அஹ்மத்). ஹிஜ்ரி 88 ம் ஆண்டு (ஸுவைகி ஹுஸைன், 2010; அஹ்மத்) கி.பி. 708 (அபூ ஆமினா பிலால், 1992) சிரியாவின் ப∴லபக்க (Bala Bek) என்ற ஊரில் பிறந்து (றஸ்ஸாக், 2008; ஸுவைகி ஹுஸைன், 2010; இப்றாஹீம், 2004) கர்க் என்ற கிராமத்திலே வளர்ந்தார் (ஸுவைகி ஹுஸைன், 2010; இப்றாஹீம், 2004; ஷைக், 2006; அஹ்மத்). இவர் பிறந்த காலத்தில் அதிக ஸஹாபாக்கள் வாழ்ந்தனர். இதனால் அதிகமான ஸஹாபாக்கள் மற்றும் தாபிஊன்களுடனான தொடர்பு இவருக்கு ஏற்பட்டது. இதனால் அதிக ஸஹாபாக்களையும், தாபிஊன்களையும் சந்தித்ததுடன் அவர்களிடம் அதிகமாகக் கற்றுக் கொண்டார்.*

*சிறுவயதில் தந்தை மரணித்ததால் தாயிடமே மிக வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்தார் (இப்றாஹீம், 2004; ஷைக், 2006). அவருக்கு நான்கு வயதாக இருக்கும் பொழுது தாய் திமிஷ்கிற்கு புலம்பெயர்ந்தார் (ஸுவைகி இப்றாஹீம், 2004; ஷைக், 2006). அங்கு காரியாலயத்தில் எழுதுவினைஞராக கடமையாற்றினார். பின் இவரின் அறிவுத்திறமையால் யமாமாவின் காரியாலயத்திற்கு மாற்றப்பட்டார் (இப்றாஹீம், 2004). அந்நேரம் திமிஷ்க் உமையா ஆட்சியின் தலைநகராகவும் ஹதீஸ் கலை வல்லுனர்கள், இஸ்லாமிய சட்டக்கலை வல்லுனர்கள் மற்றும் இஸ்லாமிய பேரறிஞர்களின் மையத்தளமாகவும் காணப்பட்டதனால் அறிவுச்சுரங்கத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டார் (ஷைக், 2006). திமிஷ்கிலே ஜுவைரியா என்ற பெண்ணைத்*

திருமணமுடித்தார் (இப்றாஹீம், 2004). தாபிஊன்களில் நன்கு பிரசித்தி பெற்ற அறிஞர்களிடமிருந்து அறிவை பெற்றுக் கொண்டார். அவர் அறிவைப் பெற்றுக் கொண்டவர்களில் நன்கு புலமைத்துவம் மிக்க அறிஞர்களாக மக்ஹூல் அஷ்ஷாமி, இப்னு ஷிஹாப் அஸ் ஸுஹ்ரி, அதா இப்னு ரபாஹ், அபூ ஜ.்பர் அல் பாகிரி, யஹ்யா இப்னு அபீபக்கர், அல்கமா இப்னு முர்ஷித், முஹம்மத் பின் ஸீரீன் போன்றோர் விளங்குகின்றனர். இவ்வாறாக இவர் மேற்சொல்லப்பட்ட அறிஞர்களிடம் கல்வி கற்று, அறிவை சேகரித்து சிரியாவிலேயே தலைசிறந்த கல்விமானாகத் திகழ்ந்தார் (இப்றாஹீம், 2004). கி.பி. 8ஆம் நூற்றாண்டில் தலைசிறந்த ஹதீஸ் வல்லுனர்களில் ஒருவராகக் காணப்பட்டார் (அபூ ஆமினா பிலால், 1992). இவருடைய அறிவுத் திறமை பற்றிப் பல அறிஞர்கள் பெருமை பாராட்டியுள்ளனர்.

அப்துர் றஹ்மான் இப்னு மஹ்தி 'அக்காலத்தில் நான்கு மார்க்க அறிஞர்கள் வாழ்ந்தனர். கூபாவில் ஸுப்யான் தௌரியும், ஹிஜாஸில் மாலிக்கும், ஷாமில் அவ்ஸாஈயும், பஸராவில் ஹம்மத் இப்னு சைத் ஆகியோரும் ஆவர் எனக் குறிப்பிடுகின்றார் (ஹுஸைன் முஹம்மத், 2010). யஹ்யா இப்னு முஈன் 'அறிஞர்கள் நான்குபேர்தான். தௌரி, அபூ ஹனீபா, மாலிக் மற்றும் அவ்ஸாஈ. இவர் இல்முஸ்ஸியர் மற்றும் சர்வதேச இஸ்லாமிய சட்டம் என்பவற்றில் நன்கு பாண்டித்துவம் பெற்றிருந்தார். இல்முஸ்ஸியரை தனியொரு தலைப்பாக பிரித்து ஆய்வு செய்த முன்னோடிகளில் இவரும் ஒருவராவார் எனக் குறிப்பிடுகின்றார் (ஹுஸைன் முஹம்மத், 2010).

இவர் லெபனானில் இருக்கும் பொழுது கலீபா அபூ ஜ.்பரின் கடைசிக் காலப்பகுதி 157 ம் ஆண்டு மரணித்தார். இரு இஸ்லாமிய ஆட்சிகளான உமையா, அப்பாஸிய என இரு காலத்திலும் வாழ்ந்தார். இவர் திமிஷ்கில் பிரசித்தி பெற்ற உலமாக்களிடம் கல்வி கற்றது மாத்திரமின்றி பத்வா கொடுத்தல், ஹதீஸ் அறிவித்தல் போன்ற தகமைகளையும் வளர்த்துக் கொண்டார். இதனால் பெருந்தொகையான மாணவர்கள் இவரிடம் கல்வி கற்க வர ஆரம்பித்தனர். இவர் பேணுதல் உள்ளவராகவும், நம்பிக்கையானவராகவும் இல்முல் ஜரஹ் வத்த.்தீல் கலையில் பாண்டித்தியம் பெற்றவராகவும் காணப்பட்டார். இவர் அறிவிக்கும் ஹதீஸின் தரம் மிக வலுவானதாகவே காணப்படும். இதனால் இவர் ஷாம் பிரதேசத்திலே மிகத் தரம் வாய்ந்த அறிவிப்பாளர் வரிசையிலுள்ளவர் என போற்றப்பட்டார்.

ஷாம் பிரதேசத்திலே முதன் முதலில் நூலுருப்படுத்திய பெருமை இவரையே சாரும். முஸ்னத் அவ்ஸாஈ, அஸ்ஸுனன் பில் பிக்ஹ், கிதாபுர்ரஸாயில் ஸியருல் அவ்ஸாஈ என்பன அவருடைய நூல்களாகும். துரதிஷ்டவசமாக அதிக நூல்கள் நிலநடுக்கத்தில் அழிந்து விட்டன (ஹுஸைன் முஹம்மத், 2010). இவரை சந்தித்து பேசிய, பழகிய அனைத்து உலமாக்களும் இவரைப்பற்றிப் புகழ்ந்துள்ளனர் (இப்றாஹீம், 2004). இப்னு கதீர் "அனைத்து முஸ்லிம்களுக்கும் இவர்தான் தலைவர் என ஏற்றுக்கொண்டனர். அதே போன்று இமாம் மாலிக் அவர்கள் "இமாம் அவ்ஸாஈ பின்பற்றத் தகுதியான அறிஞர்" எனக் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு, இமாம் ஷாபி அவர்கள் "இமாம் அவ்ஸாஈயை விட எந்த அறிஞரின் பிக்ஹும் ஹதீஸிற்கு ஈடானதாகக் கண்டதில்லை" என்றார். இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் அவர்கள் "அவ்ஸாஈ ஒரு பேரறிஞர்" எனக் கூறுகின்றார். இமாம் நஸாயி அவர்கள் "அவ்ஸாஈ ஷாம் பிரதேச மக்களின் அறிஞரும் மார்க்க ஞானியுமாகும்" எனக் கூறுகின்றார். அப்துல்லாஹ் இப்னு முபாரக் அவர்கள் "இச்சமுதாயத்திற்குரியவைகளை தெரிவு செய் எனக்கூறினால் ஸுப்யான் தௌரி மற்றும் அவ்ஸாஈயை தெரிவுசெய்திருப்பேன். எனினும் அவர்களில் ஒருவரை தெரிவு செய் எனக்குறிப்பிட்டால் அவ்ஸாஈயை தெரிவு செய்திருப்பேன்" எனக் கூறுகின்றார். இவ்வாறு அறிவில் தலைசிறந்து விளங்கிய இவர் மார்க்க சட்டத்தீர்ப்புக்களை வழங்குதலில் சிறப்பிடம் வகிக்கக் கூடியவராகக் காணப்படுகின்றார்.

## 2. ஆய்வு நோக்கம்

இமாம் அவ்ஸாஈ அவர்கள் இஸ்லாமிய சட்டத்துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்கள் தொடர்பாக விரிவாக ஆராய்தல்.

## 3. ஆய்வு முறையியலும் தரவு சேகரித்தலும்

பண்புரீதியாக அமைந்துள்ள இவ்வாய்வானது இரண்டாம் நிலைத்தரவுகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக இமாம் அவ்ஸாஈ அவர்கள்

இஸ்லாமிய சட்டத்துறைக்கு செய்த சேவை தொடர்பாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் நூட்கள் போன்றவை மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## 4. பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

இவ்வாய்வானது இமாம் அவ்ஸாஈ அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை வரலாறு, அவருடைய அறிவுத்தேடல், இஸ்லாமிய சட்டத்துறைக்காற்றிய பங்களிப்புகள், இஸ்லாமிய சர்வதேச சட்டத்துறைக்காற்றிய பங்களிப்புக்கள் போன்ற பிரதானமான 4 தலைப்புகளின் கீழ் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

### *4.1 தனிப்பட்ட வாழ்க்கை முறை*

இளம் வயதிலிருந்தே வணக்க வழிபாடு, உள்ளச்சம் என்பவற்றில் பெயர்பெற்றிருந்தார். அவருடைய தனிமையிலே அதிக வணக்கவழிபாடுகளில் ஈடுபடக்கூடியவராகக் காணப்பட்டார். அவர் தொழுகைக்காக நின்றால் உயிர் பிரிந்த உடல் போல் பயபக்தியுடன் நிற்பார். இரவு முழுவதும் குர்ஆனும் அழுகையிலுமே களிப்பார். அவருடைய அழுகை பாயை நனைத்துவிடும். தொழுகை முடிந்ததும் யாருடனும் பேசாமல் திக்ர் துஆக்களில் ஈடுபடுவார். பின் மாணவர்களுக்கு கற்பிப்பதில் ஈடுபடுவார். இவர் ஹஜ்ஜுக்காக பயணம் செய்யும் போது தனது பல்லக்கில் தூங்காமல் நபிலான வணக்கவழிபாடுகளிலும் குர்ஆன் ஓதுவதிலுமே இருப்பார். இவரைக் காண்பவர் உமர் (ரழி) அவர்களுடைய வணக்க வழிபாடு போல் எனக்கூறுவர் (ஷைக், 2006).

அவருடைய நல்ல குணங்களில் உள்ளவைதான் விருந்தினர்கள் மற்றும் மாணவர்களுடன் சேர்ந்து செல்வார். தனது சேவர்களுடனும் ஆலோசனை புரிவார். இவருக்கு கலீபாக்களிடமிருந்து நன்கொடைகள் வரும் பொழுது அவற்றை மறுப்பார். எனினும் அவர்களுக்கு மரியாதை வழங்கும் முகமாக ஏற்றுக் கொண்டாலும் அதனை வீட்டிற்கு எடுத்துச் செல்லாது ஏழைகள், தேவையுடையோர், கல்வி கற்கும் மாணவர்கள் என அனைவருக்கும் வழங்குவார். அவசியம் என்றால் மாத்திரமே பேசுவார் சப்தமிட்டுச் சிரிக்காமல் இலகுவாக சிரிப்பார். தன்னை மக்களுக்கு கற்பித்து வழிகாட்டி உபதேசம் செய்வதற்கே அர்ப்பணித்தார். இதனால் இவர் "முஸ்லிம்களுக்கான உபதேசி" எனப் புனைப்பெயரிட்டு அழைக்கப்பட்டார் (ஷைக், 2006).

### *4.2 அறிவுத்தேடல்*

இமாம் அவ்ஸாஈ சிறுவயது முதலே கல்வி கற்கலானார். இவருடைய ஆசிரியர்களில் அஷ்ஷெய்க் மக்ஹூல் குறிப்பிடத்தக்க ஒருவராகக் காணப்பட்டார். ஆரம்பமாக இவர் அல் குர்ஆனை கர்க் கிராமத்தில் இருக்கும் பொழுது கற்றுக் கொண்டார். பின்பு கல்வியில் கொண்ட ஆசை மென்மேலும் கற்கவேண்டும் என்று அவரைத் தூண்டியது. இதனாலே திமிஷ்க் சென்று அங்கு அறிஞர் மக்ஹூலிடம் கல்வி கற்க ஆரம்பித்தார் (ஹுஸைன் முஹம்மத், 2010).

இமாம் அவ்ஸாஈ சிறுபராயமுதலே கல்விகற்க ஆரம்பித்தார். இவர் கல்வி கற்பதன் மீது கொண்ட அவா பதின்மூன்று வயதிலே பத்வா கொடுக்கலானார். இதற்காக அவர் பல கல்விப்பிரயாணங்களை மேற்கொண்டார் (இப்றாஹீம், 2004). இவருடைய முதற்பிரயாணம் உமையாக் காலத்தின் ஸ்தீரத்தளமாகவும் அதிக மார்க்க அறிஞர்கள் ஒன்று கூடுமிடமாகவும் காணப்பட்ட திமிஷ்க் நோக்கியதாகக் காணப்பட்டது. அங்கு திமிஷ்கின் காழி நமிர் இப்னு அவ்ஸ் இடம் இணைந்து கல்வி கற்றார். பின் ஷாமின் பிரபல்யமான சட்டக்கலை அறிஞர் மக்ஹூலிடம் கல்வி கற்று அவரிடம் அதிகமான ஹதீஸ்களைக் கற்றுக் கொண்டார் (இப்றாஹீம், 2004). அடுத்து இவர் வாலிபராக இருந்த காலத்தில் தொழில்நிமித்தமாக யமாமாவிற்கு சென்றார் (ஸுவைகி ஹுஸைன், 2010; இப்றாஹீம், 2004). இவர் முதலாவதாக சந்தித்தவர்தான் அறிஞர் யஹ்யா இப்னு கதீர். இது தொடர்பில் இமாம் தஹபி மற்றும் ஏனையோர் குறிப்பிடுகையில்: "இமாம் அவ்ஸாஈ யமாமாவிற்கு வந்து பள்ளிவாசலுக்குள் தொழுதார். அதனை அவதானித்த யஹ்யா இப்னு கதீர் வியப்படைந்து: எப்படிப்பட்ட ஆச்சரியமான வாலிபர் இவர்? கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸை போல் தொழுகிறாரே எனக்குறிப்பிட்டார். பின் இமாம் யஹ்யாவிடமிருந்தே அதிகமாகக் கல்வி கற்று சுமார் பதின்மூன்று அல்லது பதிநான்கு நூல்களை வெளியிட்டார். துரதிஷ்டவசமாக அவை அனைத்தும் எரிந்துவிட்டன. பின்னர் யமாமாவில் தனது ஆசிரியர் யஹ்யாவின் வழிகாட்டலின் பெயரில் இமாம் ஹஸனுல் பஸரி மற்றும் இப்னு ஸீரீனிடம் கல்வி கற்பதற்காக இமாம் அவ்ஸாஈ பஸரா நோக்கி பிரயாணித்தார். எனினும் அவர்

செல்ல முன்பே இமாம் ஹஸன் மரணித்திருந்தார். இமாம் இப்னு ஸீரீன் கடும் நோயால் பீடிக்கப்பட்டிருந்தார். அதனால் அவர்களிடம் கற்க முடியாமல் போனார் (இப்றாஹீம், 2004).

அறிவைத்தேடும் நோக்கில் இவர் பயணித்த இடங்களில் பைத்துல் முகத்திஸும் ஒரு முக்கிய இடமாகக் காணப்படுகின்றது. இமாம் பைத்துல் முகத்தஸிற்கு பல முறை பிரயாணம் செய்து அங்கு தொழுகைகள் மேற்கொண்டிருந்தார் (இப்றாஹீம், 2004). அத்தோடு, ஹஜ் காலப்பகுதி அவ்ஸாஈயிற்கு வணக்கவழிபாடுகளுக்கும் அதிக மார்க்க அறிஞர்களை சந்தித்து மார்க்க விடயங்களை கலந்தாலோசிப்பதற்கும் வாய்ப்பாகவும் காணப்பட்டது. இமாம் மாலிக் பின் அனஸ், ஸுப்யான் தௌரி போன்ற பிரசித்தி பெற்ற மார்க்க அறிஞர்களை சந்தித்தார் (இப்றாஹீம், 2004).

இமாம் அவ்ஸாஈ சிறுபராயமுதல் கல்வி கற்க ஆரம்பித்து அதிக பிரதேசங்களுக்கு கல்விநோக்காக பிரயாணம் செய்ததனால் அதிக ஆசிரியர்களிடம் கல்வி கற்றிருக்கிறார். அவர்கள் கல்வி கற்ற ஆசிரியர்களாக, இப்ராஹீம் இப்னு முஹம்மத் இப்னு ஹாரித், ஹஸ்ஸான் இப்னு அதிய்யா அத்திமிஷ்கி, ரபீஆ இப்னு அபீ அப்துர்றஹ்மான், ஸுலைமான் இப்னு மஹ்ரான், அப்துர்றஹ்மான் இப்னு காசிம், அதா இப்னு ரபாஹ், அல்கமா இப்னு அபீ ரபாஹ், அம்ர் அப்னு ஷுஅய்ப், அல் காசிம் இப்னு முகைமிரா, மைமூன் இப்னு மிஹ்ரான் போன்றோர் காணப்படுகின்றனர் (ஹுஸைன், 2010; இப்றாஹீம், 2004).

இமாம் அவ்ஸாஈயிடம் அதிக மாணவர்கள் கற்றிருக்கின்றனர். எனினும் அவருடன் அதிகமாக இருந்து நூலுருப்படுத்தியவர்களும் காணப்படுகின்றனர். இவருடைய மாணவர்களாக இஸ்மாயில் இப்னு அப்துல்லாஹ், ஸஈத் இப்னு அப்துல் அஸீஸ், ஸலமத் இப்னு குல்தூம், சுதகா இப்னு அப்துல்லாஹ், ஸ.்ஸ.். இப்னு சலாம், அப்துல் ஹமீத் இப்னு ஹபீப், அம்ர் இப்னு ஹிஷாம், ஈஸா இப்னு நூஹ், வலீத் இப்னு முஸ்லிம், வலீத் இப்னு மஸீத் போன்றோர் காணப்படுகின்றனர் (ஸுவைகி ஹுஸைன், 2010; இப்றாஹீம், 2004).

#### *4.3 சட்டத்துறைக்குச் செய்த சேவைகள்*

இஸ்லாம் கடல் கடந்து வேகமாக பரவ ஆரம்பித்து ஸஹாபாக்களும் வெவ்வேறு பிராந்தியங்களுக்கு செல்ல ஆரம்பித்து பலவகையான குழப்பங்களும் தோற்றம்பெற்று பத்வாக்கள் வழங்கப்பட்டு அவை எழுத்துருவமாக பதியப்படாததனால் இமாம்கள் ஹதீஸ், பிக்ஹ் மற்றும் உலூமுல் குர்ஆன் போன்ற துறைகளில் நூலுருப்படுத்தலானார்கள். இவ்வாறாக இப்னு ஜுரைஜ் மக்காவிலும், இமாம் மாலிக் மதீனாவிலும் (முஅத்தாவை), இமாம் அவ்ஸாஈ ஷாமிலும் கோர்வை செய்ய ஆரம்பித்தனர். எனினும் இதற்கு முற்பட்ட காலங்களில் அல் - குர்ஆனை மனனமிட்டது போன்று ஹதீஸ் மற்றும் பிக்ஹ்களை உள்ளத்தில் மனனமிட்டு வைத்தே கூறினார்கள். இமாம் அவ்ஸாஈ ஏராளமான நூட்களை எழுதினார். எனினும் லெபனானில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக அவரது அனைத்து நூல்களும் அழிந்து விட்டன. எனினும் முஸ்னத் இமாம் அவ்ஸாஈ, கிதாபுஸ் ஸுனன் பில் பிக்ஹ், கிதாபுல் மஸாயில் பில் பிக்ஹ், கிதாபுஸ் ஸியரில் இமாம் அவ்ஸாஈ போன்ற நூல்கள் மாத்திரமே எஞ்சியிருக்கின்றன (இப்றாஹீம், 2004).

இவர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மார்க்க சட்டங்களுக்கு பத்வா வழங்கியுள்ளார். இது தொடர்பாக இமாம் இப்னு அஸாகிர் கொடை வழங்குவதில் மிக உயர் இடத்தில் காணப்பட்டார். இவருடைய மரணத் தருவாயில் தனக்கென்று எவ்வித சொத்துக்களோ வீடோ இருக்கவில்லை. மாறாக 7 தீனார் நாணயங்கள் மாத்திரமே காணப்பட்டன எனக் குறிப்பிடுகின்றார். அக்காலத்து மக்கள் இவரின் திறமையை அவதானித்து இவர் மார்க்க விடயங்களுக்கு மாத்திரம் இமாம் அல்ல. மாறாக, அரசியல், சமூக மற்றும் நிர்வாக விடயங்கள் அனைத்திற்கும் தகுதியான ஆளுமை கொண்டவர் என அடையாளப்படுத்தினர் (ஹுஸைன் முஹம்மத், 2010).

இவர் மார்க்க விடயங்களில் நல்ல துணிவும் வீரமும் கொண்டவராக காணப்பட்டார். நன்மையை ஏவி தீமையை தடுக்கும் விடயத்தில் எவருக்கும் அஞ்சாதவராக இருந்தார். இதனை அவர் கலீபாக்கள், நீதிபதிகள், அரசியல் தலைவர்களுக்கு எழுதுகின்ற கடிதங்களினூடாக கண்டு கொள்ளமுடியும். குறிப்பாக கலீபா அபூ ஜ.்பர் அல் மன்ஸூரிற்கு மிகவும் உருக்கமாக இவர் தொடர்பாக எழுதியதை காணலாம். அதே போன்று அஹ்மத் அமீன் 'அவ்ஸாஈயினுடைய ஆளுமையைப் பிரதிபலிக்கும் பல இரங்கற்பாக்கள் உள்ளன. அவரின் சமாதானமும் இறையச்சமும், கலீபாக்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் முன்னிலையில் உண்மையை கடைப்பிடிப்பதில் உறுதியாய் இருத்தல், அவர்களுக்கு பகிரங்கமாக உபதேசம் செய்தல் போன்றவை சிறப்பு வாய்ந்தவையாகும்' எனக் குறிப்பிட்டார் (ஹுஸைன் முஹம்மத், 2010).

இமாம் அவ்ஸாஈயிக்கென்று தனியொரு மத்ஹப் தோன்றியது. இவர் அல் முஜ்தஹித் முத்லக் என்ற அந்தஸ்தைப் பெற்றார். இமாம் தஹபி கூறுகையில்: இமாம் அவ்ஸாஈயிற்கென்று தனியொரு பிரசித்தி பெற்ற மத்ஹபே காணப்பட்டது. அதனை ஷாம் ஸ்பெய்ன் மக்கள் பின்பற்றினர். எனினும் பிற்பட்ட காலங்களில் அது அழிந்து விட்டது (ஹுஸைன் முஹம்மத், 2010). அவ்ஸாஈ இமாம் மாலிக் மற்றும் அபூ ஹனீபா ஆகிய இருவரின் காலப்பகுதியிலும் வாழ்ந்தார். அவ்ஸாஈயிற்கென்று தனிப்பட்ட முறையில் மார்க்க சட்ட எடுப்புக்கள் காணப்பட்டன. இவர் இமாம் அபூ ஹனீபா போன்று சிந்தனை ரீதியாக முக்கியத்துவம் கொடுப்பதை தவிர்ந்து கொண்டார். இதனால் அத்தியவசியமான நேரங்களை தவிர ஏனைய நேரங்களில் ஹதீஸ்களை மையப்படுத்தி மாத்திரமே சட்டங்களை எடுப்பார். எங்கெல்லாம் அல்குர்ஆன் வசனங்கள் மற்றும் ஹதீஸ்களின் வாசகங்கள் தெளிவாகக் காணப்படுகின்றனவோ அங்கு அளவுக்கதிகமாக கியாஸையும், ஒப்பீட்டுக் காரணங்களையும் பயன்படுத்துவதை எதிர்த்து வந்தார். இதனால்தான் கியாஸ் முறைமையை இவர் வெறுக்கலானார். (ஹுஸைன் முஹம்மத், 2010; அபூ ஆமினா பிலால், 1992). இவருடைய மத்ஹபானது சிரியா, ஜோர்டான், பலஸ்தீன், லெபனான், ஸ்பெய்ன் போன்ற நகரங்களில் பரவியது (அபூ ஆமினா பிலால், 1992).

ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்த அபூ ஸர்ராஹ் முஹம்மது உத்மான் என்பவர் 10 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் டமஸ்கஸ் நகரில் நீதிபதியாக நியமிக்கப்படும் வரை இமாம் அவ்ஸாஈயின் மத்ஹப் சிரியாவில் பிரதான மத்ஹபாக மக்களால் பின்பற்றப்பட்டு வந்தது. ஷாபிஈ மத்ஹபின் அடிப்படை நூலான 'முக்தஸர் அல் முஸன்னீ' என்ற நூலை முழுமையாக மனனம் செய்கின்றவர்களுக்கு அபூ ஸர்ராஹ் முஹம்மது உத்மானால் நூறு தீனார்கள் பரிசாக வழங்கப்பட்டு வந்தது. இதுவே அவ்ஸாஈ மத்ஹப் படிப்படியாக மறைந்து ஷாபிஈ மத்ஹபைப் பின்பற்றுவோர் அதிகரிப்பதற்குப் பிரதான காரணமாக அமைந்தது. இதன் விளைவாக கி.பி. 11ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் அவ்ஸாஈ மத்ஹபைப் பின்பற்றுவோர் எவருமே இல்லாத நிலை ஏற்பட்டது (அபூ ஆமினா பிலால், 1992). இருந்த போதிலும் இவர் இஸ்லாமிய சட்டத்துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்கள் அதிகமான நூட்களில் பதிவு செய்யப்பட்டு இன்று வரை நிலைத்திருக்கின்றன (அபூ ஆமினா பிலால், 1992).

### *4.4 சர்வதேச சட்டத்துறைக்கு செய்த பங்களிப்புக்கள்*

இமாம் அப்துர்ரஹ்மான் அல்-அவ்ஸாஈ மற்றும் இமாம் முஹம்மத் இப்னு ஹஸன் அஷ்ஷைபானி ஆகிய இருவரும் சர்வதேச சட்டத்தின் அடிப்படையை உருவாக்குவதில் சர்வதேச ரீதியாக முன்னோடிகளாகக் காணப்பட்டனர். இமாம் அவ்ஸாஈ யுத்தம் மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறுகின்ற வேளைகளில் மனிதர்கள் அனைவரும் சமத்துவமாக ஒரே குடும்பத்தினர்களாக வாழவேண்டும் என்ற தூரநோக்கின் அடிப்படையில் மார்க்கத் தீர்ப்புக்களை வழங்குவார். யுத்த காலத்தில் விவசாயிகள், இடையர்கள், மதகுருமார், வயோதிபர் மற்றும் நஸாராக்களின் வணக்கஸ்தலங்களையுடையவர்கள் யுத்தம் செய்தாலே தவிர அவர்களுக்கு எவ்வித அநியாயமும் இழைக்கவேண்டாம் என தடுத்தார். அதேவேளை பெண்களும் சிறுவர்களும் பயிற்சி பெற்ற போதிலும் அவர்களுக்கு எவ்வித தீங்கும் இழைக்கக்கூடாது என்றும் எதிரிகளின் செல்வங்கள், கால்நடைகள், மரங்களை பாழ்படுத்தக் கூடாது எனவும் பணித்தார்கள். இவ்வாறாக கலீபா அபூபக்கர் சித்தீக் (ரழி) அவர்களின் யுத்த கால போதனைகளை பின்பற்றினார்கள் (பரீதா).

இமாம் அவ்ஸாஈ மற்றும் ஷைபானி சமாதான நிலவரங்களின் போது சர்வதேச தொடர்புகளை ஏற்படுத்த பின்வரும் யுக்திகளை கையாண்டனர். தாருல் அஹ்த், தாருஸ் ஸலாம், தாருல் இஸ்லாம், தாருல் ஹர்ப் போன்றவற்றில் சமாதான தொடர்புகளை மேம்படுத்தல், தலைமைத்துவம் மற்றும் உடன்படிக்கை ஆகிய விடங்களில் சில நுட்பங்களைக் கையாண்டுள்ளனர். இமாம் அவ்ஸாஈயின் கருத்துப்பிரகாரம் அஹ்லுத்திம்மாக்கள் எமக்குக் கட்டுப்படும் பட்சத்தில் அவர்களையும் முஸ்லிம்களின் இடத்தில் வைத்தே ஒரு நீதிபதி தீர்ப்பளிக்க வேண்டும் (பரீதா).

பொதுவாக யுத்தம் என்பதே மு.்.மினான ஆன்மாக்களுக்கு மிக வெறுப்பான ஒரு செயலாகும். ஏனெனில் அதன் நோக்கமே மனித உயிரைக் கொல்வதுதான். என்றாலும் முஹம்மது நபி(ஸல்) தொடக்கம் அனைத்து நபிமாரும் வழிகாட்டிய மனித நேயம் என்பது எந்தவொரு உயிருக்கும் தீங்கு விழைவிக்காமல் இருப்பதாகும் (பரீதா).

யுத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் விடயங்கள் இதில் உள்வாங்கப்படும். பின்வரும் மூன்று நிலமைகளில் யுத்தம் செய்வது மார்க்கத்தில் கூடும். முஸ்லிம்கள் மீது தனியாகவோ கூட்டாகவோ

எதிரிகள் அடர்ந்தேறுதல்.; ஒடுக்கப்பட்ட சமூகத்திற்குத் தனியாகவோ அல்லது கூட்டாகவோ உதவி செய்யும் போது; உயிர், மானம், தேசத்தை பாதுகாக்கும் போது (பரீதா).

தாக்குதல் மேற்கொள்ளாமல் சமாதானத்தை ஏற்படுத்தி மக்கள் தங்கள் மார்க்கத்தில் பீதி ஏற்படாமல் இருக்க யுத்தம் நடைபெறவுள்ளமை அறிவிக்கப்படும். யுத்தம் என்பதே தாக்கு வதனைத் தடுப்பதுதான். இதனால் தான் நபி (ஸல்) அவர்கள் ‘எதிரிகளுடன் தாக்குதல் மேற்காள்ள வேண்டும் என விருப்பப்படாதீர். அவர்கள் உம்மிடம் வந்தால் பொறுமையாக இருங்கள் எனக் கூறுவார்கள். அவ்வாறில்லாமல் யுத்தம் தான் செய்யவேண்டும் எனக் கூறினால் எதிரிகளின் தளபதிக்கு மூன்று தேர்வுகளை வழங்குவார்கள். 1. இஸ்லாத்தை ஏற்று முஸ்லிம்களாக வாழல் 2. முஸ்லிம்களை அமைதியாக வாழவிடல் 3. யுத்தம் செய்தல் (பரீதா).

வால் வெட்டும் கொலையும் என்று செல்லாமல் மக்களை சேர்ந்து நடத்தல் வேண்டும். ‘அல்லாஹ்வின்’ பெயராலும் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல் கொண்டும் பரந்து செல்லுங்கள். வயோதிபரையோ, சிறார்களையோ, சிறுவர்களையோ, பெண்களையோ கொலை செய்யாதீர் (பரீதா).

போரின் போது எதிர்ப்படையுடன் நடந்து கொள்ள வேண்டிய முறைப்படி மேற்கூறப்பட்ட ஹதீஸின் அடிப்படையில் இமாம் அவ்ஸாஈ பின்வருமாறு குறிப்பட்டுள்ளார். எதிர்ப்படையில் பெண்களும், சிறுவர்களும் கொல்லப்படக்கூடாது. அவர்கள் போரில் ஏற்படும் சண்டையில் ஒரு பகுதியினராக எடுத்துக் கொள்ளப்படமாட்டார்கள். அவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டாலும் கூட அவர்கள் கொல்லப்படக்கூடாது (அப்துல் சத்தார், 2006).

முஸ்லிம் எல்லையில் வருவதற்கு பாதுகாப்பு (அமான்) அளிக்கப்பெற்றவரான, முஸ்லிமல்லாத பகைவரின் பிரஜைகள் (அல்-ஹர்பீ) இழைக்கக்கூடிய குற்றத்திற்கு முஸ்லிம்களின் சட்டப்படி தண்டனைகள் வழங்குவது தொடர்பாக இமாம்களுக்கிடையில் பல கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. இது தொடர்பாக இமாம் அவ்ஸாஈ அவர்களின் கருத்தினை நோக்கும் போது பாதுகாப்பு (அமான்) அளிக்கப்பெற்றவரான, முஸ்லிமல்லாத பகைவரின் பிரஜைகள் (அல்-ஹர்பீ) இழைக்கக் கூடிய குற்றத்திற்கு அவர்கள் முஸ்லிம்களின் சட்டப்படியான தண்டனைக்கு உட்படுத்தப்படக் கூடிவரல்லர் என்று கூறுகின்றார் (அபூ ஸுலைமான், 2015).

இது தொடர்பாக இஸ்லாமிய அறிஞர்களிடம் பல கருத்துக்கள் காணப்படுகின்றன. ஷாபிஈ மற்றும் ஹன்பலி பிரிவினர் வேதம் அளிக்கப்பட்டோரிடமிருந்தும், மஜூஸிகளிடமிருந்தும் மட்டுமே ஜிஸ்யா ஏற்கப்படலாம். பல தெய்வ வணக்கஸ்த்தர்களிடமிருந்து அதனை ஏற்க முடியாது என்று கூறுகின்றனர். அதே போன்று ஹனபி மற்றும் மாலிகீ பிரிவினர் அறேபிய பல தெய்வ வணக்கஸ்த்தவர்கள் தவிர்ந்த ஏனைய எல்லா முஸ்லிமல்லாதோரிடமிருந்தும் ஜிஸ்யா ஏற்கப்படலாம் என்று கூறுகின்றனர். இது தொடர்பாக இமாம் அவ்ஸாஈயின் கருத்தானது எவ்வித விதிவிலக்குமின்றி பல தெய்வ வணக்கஸ்த்தவர்கள் எல்லோரிடமிருந்தும் ஜிஸ்யா அறவிடப்படலாம் என்று கூறுகின்றார். இவருடைய கருத்துடன் இமாம் தவ்ரீயும் உடன்படுகின்றார் (அபூ ஸுலைமான், 2015).

‘அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய நாயன் யாருமில்லை என ஏற்கும் வரை பல தெய்வ வணக்கஸ்த்தர்களை எதிர்த்துப் போராடும்’.

மேற்கூறப்பட்ட அல்குர்ஆன் வசனமானது சர்வதேச சட்டத்தில் பல குழப்பங்களைத் தோற்றுவித்துள்ளமையை அவதானிக்கலாம். இது தொடர்பாக இமாம்களுக்கிடையில் பல கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. பல தெய்வ வணக்கஸ்த்தர்கள் பற்றிய கருத்தானது மூட நம்பிக்கையிலான சிலை வழிபாட்டினையே பல தெய்வ வணக்கம் குறித்து நிற்கின்றது என்கின்றார். இது தொடர்பாக அபூஹனீபா குறிப்பிடுகையில் இது அறேபிய பல தெய்வ வணக்கஸ்த்தர்களை மட்டுமே குறிக்கின்றது என்கின்றார். அதே போன்று இமாம் மாலிக் அவர்கள் இது தனியொரு குலத்தவரைக் குறிப்பதற்காக அதாவது குறைஷிக் குலத்தைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள சொல்லாகும் எனக் குறிப்பிடுகின்றன்றார். இது தொடர்பாக இமாம் அவ்ஸாஈயின் கருத்தினை நோக்கும் போது அல்குர்ஆன் மற்றும் ஸுன்னாவில் கூறப்பட்டுள்ளதனைப் போன்று குறித்த சொல்லை வரலாற்றுப் பின்னணியில் வைத்து நோக்கும் போது இந்த சொற்பிரயோகத்தை இனிமேலும் சிலை வணக்கஸ்த்தவர்களைக் குறிக்கப் பயன்படுத்த முடியாது என்ற கருத்தை முன்வைத்தார். இவருடைய கருத்தினை வைத்து நோக்கும் போது குறித்த சொல்லானது ஒரு குறிப்பிட்ட காலத்தில் வாழ்ந்த ஒரு பிரிவினரைக் குறிப்பதற்குப் பயன்படுத்திய சொல்லாகும். அது தற்காலத்திலும் பயன்படுத்துவது

பொருத்தமற்றது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. இவருடைய இக்கருத்தினையே இமாம் தௌரீயும் முன்வைத்துள்ளார் (அபூ ஸுலைமான், 2015).

## 5. முடிவுரை

இமாம் அவ்ஸாஈ அவர்கள் ஏனைய பிரதான நான்கு இமாம்களைக் காட்டிலும் பாரியளவு பிரசித்தம் பெறாவிட்டாலும் கூட, அவர் இஸ்லாமிய சட்டத்துறைக்காற்றிய பங்களிப்பு இன்றும் இஸ்லாமிய சட்டவியலுக்குத் துணையாக அமைந்து வருகின்றது. இவருடைய பெரும்பாலான சட்டக்குறிப்புக்கள் நடுநிலைத் தன்மை கொண்டவையாகக் காணப்படுகின்றன என்பதுவும் இவ்வாய்விலிருந்து பெறப்பட்ட முடிவாகக் காணப்படுகின்றது. தன்னுடைய தனிப்பட்ட வாழ்வில் இறைபொருத்தத்திற்காக வாழ வேண்டும் என்ற நோக்கோடு வாழ்ந்தது மாத்திரமன்றி தன்னுடைய அறிவை பல பாகங்களிலுள்ள ஆசிரியர்கள் துணை கொண்டு பெருக்கிக் கொண்டதோடு, அவற்றை தனது மாணவர்களுக்கும் கற்றுக் கொடுத்து இஸ்லாமிய சட்டத்துறைக்கு பெரும் பங்காற்றியுள்ளார். இவ்வாறு இஸ்லாமிய சட்டத்துறைக்கு தன்னால் இயன்ற சேவை செய்த இமாம் அவ்ஸாஈ அவர்கள் ஹிஜ்ரி 157 ம் ஆண்டு (ஹுஸைன், 2010; இப்றாஹீம், 2004) கி.பி. 774 இல் (அபூ ஆமினா பிலால், 1992) லெபனானில் அபூ ஜஃபர் அல் மன்ஸூரின் இறுதிக் காலப் பகுதியில் ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று மரணித்தார். அவர் லெபனானிற்கு அருகிலுள்ள ஹன்தூஷ் என்ற கிராமத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டார் (ஹுஸைன், 2010; இப்றாஹீம், 2004).

## உசாத்துணைகள்

حسين و هناء محمد (2010). *الإمام الأوزاعي الفقيه المجاهد المحدث*. مجلة كلية العلوم الإسلامية.

فريدة و مزياني. *دور مبادئ الإمام الأوزاعي والإمام الشيباني فى العلاقة الدولية*. مجلة الإحياء 633 – 648

الشيخ عبد الستار (2006). *الإمام الأوزاعي شيخ الإسلام وعالم أهل الشام*. دمشق : دار القلم.

إبراهيم تيسير كامل إسماعيل (2004). *منهج الإمام الأوزاعي الاجتهاد*. غزة : الجامعة الإسلامية.

الصويغي و عبد المحسن عبد العزيز. *مذهب الإمام الأوزاعي*. جامعة ملك سعود: كلية التربية بالرياض.

أحمد و حمزة. الجفلة. جامعة. *الدور الريادي للإمامين الأوزاعي والشيباني في تدوين القانون الدولي الإسلامي عصر الإمامين الأوزاعي والشيباني*. *https://www.asjp.cerist.dz/en/downArticle/321/4/3/43338*

Razzaq. M. N. M. A, (2008). Imam Al- Awzai's approach to deriving rulings. *Journal of The Iraqi university.*

*அப்துல் ஹமீத் அ. அபூ ஸுலைமான் (2015). மொழியாக்கம்: ஸனீர். ஏ.ஜே.எம் (2017). சர்வதேச உறவுகள் பற்றிய இஸ்லாமிய கோட்பாடு. பூஸின் டெக்ட்ஸ்.*

*அபூ ஆமினா பிலால் (1992). மொழியாக்கம்: முபாரக்.ஏ.ஆர்.எம். பிக்ஹுச் சட்டமும் மத்ஹபுகளும். அல் அமல் வெளியீட்டகம். மெட்ராஸ்.*